RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijmrd2521

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

# A Comparison of Naladiyar, Thirumoolar's Tamil Moovayiram and Vemanar's Songs in the Indian Moral Tradition

**M. Thadsanamoorthi [a,*], G. Ramesh [a]**

[a] Department of Tamil, School of Social Science & Humanities, Central University of Tamilnadu, Tiruvarur-610005, Tamil Nadu, India.

*Corresponding author Email: thadsanamoorthi001@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd2521

Received: 08-02-2025; Revised: 03-04-2024; Accepted: 11-04-2025; Published: 17-04-2025

Check for updates

**Abstract:** The Tirukkural, Naladiyar, and Thirumoolar's Tamil Moovayiram, which emerged in Tamil Nadu, were composed to preach ethics in line with the traditional moral philosophy. The Naladi Naanuru holds a prestigious position in Tamil classical literature, after the Tirukkural. Following this, during the Pallava period, devotional literature arose to promote ethics and spread religious ideals. The ethical contemplations found in the Naladiyar, Thirumoolar's Moovayiram (which emerged during the Bhakti movement), and the verses of Vemana in Telugu advocate virtues such as upholding righteousness, truthfulness, and the indispensability of honesty. When these ethical principles are examined from a broader perspective, the underlying unity and moral approaches embedded in Indian culture become evident. Therefore, this study aims to compare and analyze the ethical messages found in the works of Naladiyar, Thirumoolar's Tamil Moovayiram and Vemana.

**Keywords:** Naladiyar, Thirumoolar's Tamil Moovayiram, Vemana, Bhakti Movement

**Language:** **Tamil**

# இந்திய அறவியல் மரபில் நாலடியார், திருமூலரின் தமிழ் மூவாயிரம் வேமனார் பாடல்கள் - ஓர் ஒப்பீடு

**மா. தட்சணாமூர்த்தி [அ,*], க. இரமேஷ் [அ]**

[அ] தமிழ்த்துறை, சமூக அறிவியல் & மொழிகள் புலம், தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம்,
திருவாரூர் -610005, தமிழ்நாடு, இந்தியா

## முன்னுரை

தமிழ்நாட்டில் தோன்றிய திருக்குறள், நாலடியார், திருமூலரின் தமிழ் மூவாயிரம் ஆகியன அறவியல் மரபையொட்டி அறத்தை போதிக்க எழுந்தனவையாகும். நாலடி நானூறு தமிழில் சங்கம் மருவிய கால இலக்கிய வரிசையில் திருக்குறளையடுத்து பெருமைச் சிறப்புடன் திகழ்கிறது (Saravanan, 2023). அதனையடுத்து பல்லவர் காலத்தில் பக்தி இலக்கியங்கள் அறத்தைப் போதிக்கவும் மதத்தை பரப்பும் நோக்கிலும் எழுந்தன (Alice, 2016). நாலடியாரும், பக்தி இயக்க காலத்தில் தோன்றிய திருமூலரின் மூவாயிரம் பாடல்களில் காணப்படும் அறச்சிந்தனைகளும், தெலுங்கில் தோன்றிய வேமனார் பாடல்களும் அறன் வலியுறுத்தல், பொய்யாமை, மெய்ம்மையின் இன்றியமையாமை போன்ற அறங்களை போதிக்கின்றன. இத்தகு அறங்களைப் பொதுப் பார்வையில் வைத்து நோக்கின் இந்திய பண்பாட்டின் அடித்தளத்தில் ஏற்பட்டுள்ள ஒற்றுமைகளையும் அறவியல் அணுகுமுறைகளையும் கண்டறிய முடியும். எனவே நாலடியார், திருமூலர், வேமனார் பாடல்களில் காணப்படும் அறவியல் செய்திகளை ஒப்பிட்டு ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

## தோற்றப் பிண்ணனியில் நாலடியார், திருமூலர், வேமனார் பாடல்கள்

சங்க காலத்தை அடுத்து தமிழில் அற இலக்கியங்கள் தோன்றின. இவ்வற இலக்கியங்களில் தலையாயது திருக்குறள், அதனையடுத்துச் சிறப்பிடம் பெற்றுத் திகழ்வது நாலடியார் (Sankareshwari, 2023). நானூறு சமண முனிவார்களால் இயற்றபட்ட நூல்களின் சிதைந்தான போக உள்ளனவே நானூறு பாடல்கள் ஆகும். சமண பௌத்த மதங்களை எதிர்த்து சைவ வைணவ மதங்கள் தங்கள் கொள்கைகளை பரப்பின இதனால் பக்தி இலக்கியங்கள் தோன்றின. இவ்விலக்கியங்களும் நீதியை போதித்தன. தமிழ்ச் சமூக வளர்ச்சியில் சித்தர்களின் பங்கு முக்கியமானது, சித்தர்களின் இலக்கிய ஆக்கம் பெரிதும் சமூக நலத்தை காப்பதாகவும், வளர்ப்பதாகவும் உள்ளது. அதே போல தெலுங்கில் கி.பி 14 ஆம் நூற்றாண்டில் தோன்றிய வேமனார் நாலடியாரைப் போல நான்கு வரிகளில் வாழ்க்கைக்குத் தேவையான அறத்தை போதிக்கின்றன. தெலுங்கு மொழியின் இலக்கிய வரலாறு பாரத மொழிபெயர்ப்புடன் தொடங்குகிறது. தெலுங்கு இலக்கியத்தில் நூற்றுக்கணக்கான சதக இலக்கியங்கள் தோன்றின. இந்த இலக்கிய வகை தெலுங்கு மொழியில் அனைவரையும் கவர்ந்த ஒன்றாகும். 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வேமனார் என்னும் புலவர் நூற்றுக்கணக்கான செய்யுள்கள் பாடியுள்ளார். இவையனைத்தும் வேமனார் சதகம் என்றே அழைக்கப்படுகின்றன. சமுதாயத்தில் காணப்படும் கெட்ட பழக்க வழக்கங்களைக் கடுமையாக சாடினார். “வேமன்னாவின் பத்தியங்கள் வெடிக்குண்டுகளைப் போன்றது” என்ற அண்ணாவின் கருத்து இங்கு ஈண்டு அறியத் தக்கது.

## உலக வாழ்வின் நிலையாமை

இளமை துடிப்பான பருவம் உடலின் வனப்பு காட்டும் பல்வகையான விருப்பங்களைத் தூண்டி விடுகின்றன. அந்த வேட்கைக்குள் கட்டுப்பட்டு, அதன் கண் ஈடுபடுவோர் பலர், அவர்களுடைய ஆர்வங்களும் அநுபவங்களும் நிலையற்றன ஆனால் இளமைப் பருவத்தின் ஆசாபாசங்களைக் கட்டுப்படுத்தி நல்லொழுக்க நெறியில் வாழ்வதே சிறப்பு என்பதை வலியுறுத்துகின்றன. நீதி இலக்கியங்கள் உலக வாழ்வின் நிலையாமையை வற்புறுத்தி உலக வாழ்வை வெறுத்து நிலையாமையை போதிக்கின்றன. அவற்றுள்ள திருவள்ளுவர் துறவியல் என்னும் இயலில் நிலையாமையை வலியுறுத்துகிறது. திருவள்ளுவரையடுத்து நாலடியார் துறவறத்தை வலியுறுத்துகிறது. திருமூலர் முதல் தந்திரத்தில் அறன் வலியுறுத்தலில் முக்கியமான பகுதியாக நிலையாமையை எடுத்துரைக்கிறார். அதுபோல தெலுங்கில் வேமனாவும் நிலையாமையை அறன் வலியுறுத்துதலில் ஒன்றாக குறிப்பிடுகிறார்.

ஆயுள் முடியும் ஆளைத் தேடிக் கொண்டு திரிகின்ற, அருள் இல்லாத எமன் என ஒருவன் இருப்பதால் புண்ணியத்தை தக்க காலத்தில் தேடிப் பிழைத்துக் கொள்ளுங்கள் என்று நாலடியார் குறிப்பிடுகிறது “ஆட்பார்த் துழலும் அருளில்கூற் றுண்மையால் தோட்கோப்புக் காலத்தால் கொண்டுய்ம்மின்” (இளவழகனார்.,) என்று நாலடியார் குறிப்பிடுகிறது (Rama Subramanian, 2000). இதேசெய்தியை பக்தி இலக்கிய மரபில் வந்த திருமூலரும் குறிப்பிடுகிறார். அப்பாடல் பின்வருமாறு,

“கிழக் கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே

விழக் கண்டும் தேறார் விழியிலா மாந்தர்

குழக்கன்று மூத்தெரு தாய்ச்சில நாளில்

விழக்கண்டும் தேறார் வியனுல கோரே” (Thirumoolar, 2014)

‘நாள்தோறும் கிழக்கில் உதிக்கும் சூரியன் சாய்தலைக் கண்ணொளி இல்லாத மக்கள் ஒளி கண்டும் காணாதவராகின்றனர். அது போல அகன்ற உலகில் அறிவில்லாதிருக்கும் மக்கள் குழவியாய் பிறந்து பசுக்கன்று போல திரிந்து, சில நாளில் வளர்ந்து எருதாகி நன்கு உழுது பின்னும் சில நாட்களுக்குப் பிறகு கிழமாய் எழ மாட்டாது விழுதலை கண்ணால் காண்கின்றனர். அவ்வாறு, பிறந்த உடம்புகள் யாவும் இளமை நீங்கி முதுமையுற்று விழும் என்பதை அறியாதவர்

ஆகின்றனர்' என்கிறார் திருமூலர். இதே செய்தியை தெலுங்கு கவியான வேமனா அவர்களும் நிலையாமையைப் பற்றி விவரித்துள்ளார்.

கண்முன் கண்டவர் இறப்பதும் பிறர்முன்

நாம் இறப்பதூஉம் அதற்கு சாட்சி

வாழ்வின் பிரம்ம இரகசியம் இதுவே

விசுவதாபிராம கேளாடா வேமனா (வேமனா,ஆய்வாளர் மொழிபெயர்ப்பு)

உயிருடன் கண்டவர் இறந்து விட்டால் உறவினர், முறையார் என அனைவரும் கூட்டமாகக் கூடி அழுது, பிணத்தை தூக்கிக் கொண்டு சென்று சுடுகாட்டிலே வைத்து எரிப்பர் நம்முடைய இறப்பில் இதுதான் நிகழும் இதுவே நம்முடைய வாழ்வின் இரகசியம் என்கிறார் வேமனா.

## கற்றும் பயனில்லாமை

கல்வி என்பது ஒருவன் தன் வாழ்வில் தான் தெளிவரத் தெளிந்த அறிவுடன் நடந்து கொள்வதற்கு உதவும், தகுதியையுடைய நூல்களைக் கற்றலைக் குறிப்பதாகும். கல்வியாவது, தத்தம், தொழிலுக்கு ஏற்ற அறிவுரைகளைப் பெருக்கிக் கொள்ளலும், உண்மை உணர்வதற்கான விளக்கங்களை கேட்டு அறிதலும், அவ்வாறு அறிந்ததை பிறருக்கு கற்பித்தலும் கல்வி ஆகும். வள்ளுவானார் கற்க வேண்டிய நீதி நூல்களை திறம்பெற காற்றலும், பிறகு அதன்படி நிற்றலும் அக்கல்வியின் முக்கியத்துவம் என்கிறார். அதைபோல நாலடியாரும் மெய்ம்மை என்னும் அதிகாரத்தில் கற்றும் பயனில்லாமையை விவரிக்கிறது. மெய்யறிவை விளக்கும் பல நூல்களைக் கற்பினும் அவற்றை குறித்த ஆழ்ந்த சிந்தனை இல்லையெனில் அந்நூல்களை கற்றும் பயனில்லை என்கிறது *“இடம்பட மெய்ஞ்நானம் கற்பினும் என்றும் அடங்ககாதார் என்றும் அடங்கார்” (இளவழகனார்)* என்கிறது. இவ்விளக்க நெறியை திருமூலர் தம் திருமந்திரத்தில் பயன்படுத்தியுள்ளார். நூல்களை ஓதுவதே பெருமை என்று கருதாமல் ஒரு மாத்திரை காலமாயினும் அறிவை அகமுகப்படுத்தி மெய்ம்மையை உணர வேண்டும் அதாவது உண்மைத்தன்மையை அறிய வேண்டும் என்கிறார் திருமூலர். அப்பாடல் பின்வருமாறு,

“சாத்திரம் ஓதும் சதுர்களை விட்டுநீர்

மாத்திரை போது மறித்துள்ளே நோக்குமின்

பார்த்தஅப் பார்வை பசுமரத் தாணிபோல்

ஆர்த்த பிறவி அகலவிட் டோடுமே” (Thirumoolar, 2014)

நாலடியாரும், திருமந்திரமும் குறிப்பிடும் மெய்மைப் பண்புகளை வேமனாரும் பின்வருமாறு முன்வைக்கிறார். மனிதன் பல நூல்களை காற்றாலும் அவற்றின் உண்மையான இயல்புகளை அவன் அறிந்து செயல்பட வேண்டும். இப்படி பொருள்களின் தன்மையை உள்ளவாறு உணர்ந்து தெளியும் ஆற்றல் இன்றியமையாத ஒன்றாகும்.

“பற்றற்று கற்றபவன் பலநூல் கற்பினும்

நினைவில் இல்லையெனில் யாதொரு பயனில்லை

தாமரை மீது தவளை அமர்ந்தாற் போல

விசுவதாபிரமா கேளடா வேமனா” (வேமனா, ஆ. மொ )

## பரத்தமை ஒழித்தல்

சங்க காலத்திற்கு பிறகு கள்ளுண்ணுதலையும், புலால் உண்ணுதலையும், பரத்தமையையும் ஒழித்தமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திய பெருமாகனார் திருவள்ளுவர் ஆவார். இவரையாடுத்து எழுந்த நீதி நூல்கள் அனைத்தும் பரத்தமை ஒழிபு பற்றி எடுத்துரைக்கின்றன,

அவற்றுள் நாலடியாரில் பரத்தமை இழிவு பற்றி மிகச்சிறப்பாக குறிப்பிடப் பட்டுள்ளது. விளக்கினது ஒளியும் போது மகளிறது அன்பும் வேறானவை அல்ல. விளக்கினது ஒளியும் எண்ணெய் வற்றிய பிறகு நீங்கும். பொது மகளிரது அன்பு கைப்பொருள் நீங்கிய போதே நீங்கும் என்கிறது நாலடியார்.

விளக்கொளியும் வேசயர் நட்பும் இரண்டும்

துளக்கற நாடின்வே றல்ல" (இளவழகனார்.,,)

எனவே, பொது மகளிரது அன்பை விளக்கு ஒளிக்கு நிகராக படைத்துக் காட்டுகிறது நாலடியார். நாலடியாரையடுத்து திருமூலரும் இப்பரத்தமை ஒழுக்கத்தை இடித்துறைக்கிறார். ஒருவரிடத்தில் இல்லாது பலரிடத்துச் செல்லுதலையே வாழ்க்கையாக உடைய பொது மகளிரது தோளை மிகத் தழுவி கலந்த ஆடவர் தாம் கொண்ட மயக்கத்தால் நாம் அடையத்தக்க சொர்க்க இன்பம் இதுவன்றி வேறில்லை என்று கூறுவர் ஆயினும் அவர்தான் அம்மகளிரை தமக்குச் சிறிதும் தொடர்பில்லாதவராகி பேசி விலகி ஒலிவதை பார்க்கின்றோம் என்கிறார் இதனை கீழ்க்கண்ட பாடல் மூலம் தெரிவிக்கிறார்.

"வையகத் தேமட வாரொடுங் கூடியென்

மெய்யகத் தோருளம் வைத்த விதியது

கையகத் தேகரும் பாலையின் சாறுகொள்

மெய்யகத் தேபேறு வேம்பது வாமே" (Thirumoolar, 2014)

பொதுமகளிர் என்போர், தமது நலத்தை தம் உள்ளங்கலந்து ஒருவனுக்கு மட்டுமே அளித்துத் தாழும் இன்புறுத்துகின்ற கற்புத் தன்மை இல்லாதவர்கள்.தம் நலத்தை விரும்பி, அதற்கான விலையைக் கொடுக்கும் ஆடவர்க்கெல்லாம், இன்னார் இனியர் என்னுமோர் வரைவறையின்றி இன்பம் தந்து வாழ்வார். உணவின்றி வாடிய மனிதர் பெண்களின் அழகில் மயங்கினால் வாழ்வு வீணாகும். தீயினை நோக்கி பாயும் விட்டிலைப் வாழ்வை அழித்துக் கொள்கிறான் என்கிறார். தன் செல்வத்தை எல்லாம் வேசையுறவால் போகக்கடித்து விட்டு, உணவின்றி தவிக்கும் மனிதன் தீயினை நோக்கி பாயும் விட்டிலைப் போல பாய்கிறான். என்று வேமனா இடித்துறைக்கிறார்

உணவின்றி வாடுகிறான் மனிதன்

மாதர் தம் அழகில் மயங்கினான் தீயினை

நோக்கி பாயும் விட்டிலைப் போல தீக்கின்றான்

விசுவதாபிராம கேளடா வேமனா" (வேமனா,ஆ. மொ)

## முடிவுரை

உலகத்தில் தோன்றிய அனைத்து உயிர்களும் இன்பத்தை நாடுகின்றன. இன்பம் எது என்பதில் மனிதர்களுக்கு குழப்பம் உள்ளது. அதை தீர்த்து வைப்பதற்காகவும் மனிதனை தீமையில் இருந்து தடுத்து நல்வழிப் படுத்துவதற்காகவும் இத்தகு அறநூல்கள் தோன்றலாயின. இந்திய நாட்டில் உள்ள அறப்பண்பு ஒன்றுற்கொன்று மொழியால் மாறுபட்டு இருப்பினும், உள்ளடக்க கருத்துக்களின் அடிப்படையில் ஒற்றுமை பெற்றுள்ளன. உலகில் தோன்றிய அனைத்து உயிர்களுக்கும் முடிவு என்பது உண்டு. எனவே வாழும் காலத்திலேயே நன்மைகள் பல செய்து கிடைத்த வாழ்வினை சிறப்புற வாழ வேண்டும். என்ற கருத்தை முன்வைத்து அதற்கான வழிகளையும் வாழ்க்கை முறைகளையும் நாலடியார் குறிப்பிடுகிறது. பக்தி இலக்கிய காலத்தில் தோன்றிய திருமூலர் தம்முடைய சைவ மதக்கருத்துக்களின் அடிப்படையில் நிலையாமை, கல்லாமை, பரத்தமை ஒழிபு ஆகியவற்றை பேசிக்கின்றனர். இம்மூன்று நூல்களின் கருத்துக்களை உற்று நோக்கின் உள்ளடக்க ரீதியிலும், அடிக்கருத்தைப் பொருத்தும் ஒன்றுபட்டுள்ளன. சிற்சில மாற்றங்கள் ஏற்படுகிறதே ஒழிய அடிக்கருத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என்பதே இவ்வாய்வில் கண்ட முடிவாகும். நாலடியார், திருமந்திரம், வேமனா பாடல்கள் ஆகிய மூன்றும்

நீதிகளைக் கூறுவதில் ஒன்றுகொன்று தொடர்புடன் திகழ்கிறது. ஒரு மனிதனுக்கு அறத்தை உணர்த்த வேண்டுமாயின் அவனுக்கு முதலில் உலக வாழ்வின் நிலையாமையை உணர்த்த வேண்டும். அவ்வகையில் நாலடியாரும், திருமூலரும், வேமனாரும் ஒரே நேரக்கோட்டுப் பாதையில் நின்று முதலில் நிலையாமையை உணர்த்தி பிறகு அறத்தை போதிக்கின்றனர்.

## References


Alice, A. (2016) Pathinen Kelkanaku Porulkalanjiyam: Naladiyar, Tamil University, Thanjavur, India

Rama Subramanian, V.T. (2000) Naaladiyar Moolamum Uraiyum, Thirumagal Nilayam, Chennai, India

Sankareshwari, R. (2023) Naladiyaril Valviyal Nerikal, Doctoral Dissertation, Thiruvalluvar University, Vellur, India

Saravanan, K.S. (2023) Thirukural Unarthum Nadaimurai Valviyal, Doctoral Dissertation, Thiruvalluvar University, Vellur, India

Thirumoolar, (2014) Patham Thirumurai Manthiram, Gnanasambandham Pathipagam, Mayiladuthurai, India


### Conflict of interest

The Author’s has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

### About the License

© The Author(s) 2025. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License.

### Cite this Article

M. Thadsanamoorthi, G. Ramesh, A Comparison of Naladiyar, Thirumoolar's Tamil Moovayiram and Vemanar's Songs in the Indian Moral Tradition, Indian Journal of Multilingual Research and Development, Vol 6, Iss 2, (2025) 1-5. DOI: https://doi.org/10.54392/ijmrd2521